**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் - கல்வி - 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டம் - மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், 10 பள்ளிகளுக்கு ரூ.36.30 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்னையினர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண்.44 நாள்:25.5.2000

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடிதம் எண்.பி2 / 305 /2000 நாள்:17.4.2000

ஆணை:

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.36.30 இலட்சம் செலவில், கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பினை மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்றுக் கொண்டு, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், இவ்வரசாணையின் இணைப்பில் விவரித்துள்ள 10 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு, 2000-2001ஆம் ஆண்டுக்கானபகுதி 2 திட்டத்தின் கீழ், ரூ.36.30 இலட்சம் (ரூபாய் முப்பத்தாறு இலட்சத்து முப்பதாயிரம்) செலவில் 10 கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு அரசு உத்திரவிடுகிறது. இந்த கட்டிடம் கட்டும்பணி பொதுப்பணித்துறையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். 2000-2001ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் இப்பணிக்கான நிதிஒதுக்கீட்டிலிருந்து தொகையை பெற்றுக்கொள்ள பொதுப்பணித்துறை தலைமைப்பொறியாளர் (கட்டிடம்)க்கு அரசு அனுமதி அளிக்கிறது. கட்டுமானப்பணி 2000-2001ம் நிதியாண்டுக்குள் பூர்த்தியடைய வேண்டும் என்பதை கருத்திற் கொள்ளுமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான காலி மனையை பொதுப்பணித்துறையிடம் விரைந்து ஒப்படைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகளுக்கு அரசின் ஒப்புதலை பெறுவதற்கு அவற்றை அரசுக்கு அனுப்புமாறு பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை கீழ்வரும் கணக்குத் தலைப்பில் செலவிடலாம், "4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 கல்வி ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - மிமி மாநிலத் திட்டம் யிஹி கட்டிடங்கள் - 16 பெரும்பணிகள் (த.தொ.கு எண். 4225 03 277 யிஹி 1601)

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 34091 / சந / 2000 நாள் 2.5.2000 இன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலாளர்

பெறுநர்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை 600 005.
மாவட்ட ஆட்சியர், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர், சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-6
(பெயருடன் கூடிய உறையில்)
மாவட்டக் கருவூல அதிகாரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.

நகல்:

பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**இணைப்பு**

2000-2001 பகுதி-2 திட்டத்தின் கீழ் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட வேண்டிய பள்ளிகளின் விவரம்:-

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, மேலக்கால் | மதுரை |
| 2. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, தும்மகுண்டு | மதுரை |
| 3. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, செக்காணூரணி | மதுரை |
| 4. | அரசு கள்ளர் உயர்நிலைப்பள்ளி, வே.கள்ளப்பட்டி | மதுரை |
| 5. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, வடுகப்பட்டி | மதுரை |
| 6. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, ராஜதானி | தேனி |
| 7. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, வெள்ளையம்மாள்புரம் | தேனி |
| 8. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, உத்தமபுரம் | தேனி |
| 9. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, விளாம்பட்டி | தேனி |
| 10. | அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி, கொண்டமநாயக்கன்பட்டி | திண்டுக்கல் |

/உண்மை நகல்/